## 23

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்தை அழிப்பவர்கள்

## [கலாத்தியர் 5:19-21]

*இந்த பாடத்தோடு "ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பம்" என்ற பாடத்தின் வரிசையை நாம் முடிக்கிறோம். எப்படி வெற்றிகரமான குடும்பத்தை அமைப்பது என்பதே நமது பாடத்தின் முக்கியத்துவமாய் இருந்தது - ஒரு மகிழ்ச்சியான குடும்பம், நிலைத்திருக்கிற குடும்பம், தனித்தனியே விழுந்து போகாமல் ஒன்றாக கூட்டி சேர்க்கின்ற குடும்பம். அந்த குடும்பத்தில், ஒவ்வொருவரும் தனிப்பட்ட நிறைவு காண்பது மட்டும் அல்ல, தேவனிடத்தில் ஒரு சரியான உறவு வைத்துக் கொள்வார்கள்.*

*கலாத்தியர் 5:22, 23 பேசின "அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் இச்சையடக்கம்" ஆகிய ஆவிக்குரிய கனிகளை குடும்பத்திலுள்ள எல்லா மக்களும் கொடுக்கிறவர்களாயிருந்தால், இந்த முடிவுகள் வரும் என்று நாம் நம்புகிறோம்.*

*இருப்பினும், ஆவியின் கனியை அடைவதற்கு தடைகள் உண்டு. ஆகையால் வெற்றிகரமான குடும்பம் அமைவதற்கு சில விஷயங்கள் தேவை. சில விஷயங்கள் மகிழ்ச்சியான குடும்பம் அமைவதற்கு தடையாயிருக்கும் அல்லது சந்தோஷமான குடும்பத்தை பிரிப்பதற்கு காரணமாயிருக்கும். அவைகளைத் தான் நாம் "குடும்பத்தை அழிப்பவர்கள்" என்று அழைக்கிறோம்.*

*"குடும்பத்தை அழிப்பவர்" என்ற வார்த்தை சில சமயங்களில் ஒரு புருஷனை வசீகரிக்கும் பெண்ணை குறிப்பதற்கு உபயோகப்படுத்துவோம், அதன் காரணமாக அந்த புருஷன் தன்னை வசீகரித்த பெண்ணுடன் இருப்பதற்காக தன் மனைவி பிள்ளைகளை விட்டு செல்வதுண்டு. அந்த குடும்பம் முறிந்து போகிறது அல்லது அழிந்துபோகிறது; அதனால் அந்த பெண் "குடும்பத்தை அழிப்பவர்" என்று அழைக்கப்படுகிறாள்.*

*இந்த பாடத்தில் நாம் பேசப் போகிற விஷயங்கள் நம்மைச் சுற்றி காணக்கூடிய சீரழிக்கும் பொல்லாப்பானவளைக் காட்டிலும் நிச்சயமாக மிகவும் அதிகமாக குடும்பத்தை அழிக்கக் கூடியதாகும். "குடும்பத்தை அழிக்கக்கூடிய" அவைகள் யாவை? பவுல் அவைகளை "மாம்சத்தின் கிரியைகள்" [அல்லது "செயல்கள்"] என்று அழைத்தார். அவர் கலாத்தியர் 5:19-21 ல் அவைகளைப் பற்றி பேசியிருக்கிறார்:*

> *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே;*

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நாம் இந்த "மாம்சத்தின் கிரியைகளை" கவனித்து எப்படி அவைகள், உண்மையில், நம்முடைய குடும்பத்தை அழிக்கக்கூடும் என்று கவனிப்போம்.

## பாலினப் பாவங்கள்

பவுல் வரிசைப்படுத்திய முதல் தொகுப்பு பாவங்கள் "விபசாரம்" "அசுத்தம்" மற்றும் "வேசித்தனம்" ஆகியவற்றை உள்ளடக்கியது. இவைகள் எல்லாம் பாலினப் பாவங்கள், இந்த பகுதியை நாம் குடும்பத்திற்கு செயல்படுத்துவோமானால், பின்பு *பாலினப் பாவங்கள் குடும்பத்தை அழித்து விடும் என்பதை நாம் உறுதிப்படுத்தலாம்.*

"பாவச்செயல்" ("immorality") என்பது விபசாரத்தை உள்ளடக்கியது. நாம் ஏற்கனவே கணவன் மற்றும் மனைவி ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். விபசாரம் மற்ற எல்லா செயல்களைக் காட்டிலும் மிக வேகமாய் குடும்பத்தை நிர்மூலம் ஆக்கும் என்று கூறியிருந்தோம், "பாவச்செயல்" ஓரினச் சேர்க்கையை உள்ளடக்கியதும் ஆகும் (ரோமர் 1:26, 27), இதுவும் மற்ற பலரிடம் பாலுணர்ச்சி கொண்டு துரோகம் செய்வது போல திருமணத்தை நிர்மூலமாக்கும். உண்மையில், ஓரினச்சேர்க்கை - தேவன் விளக்கியது போல - குடும்பம் கூட உருவாகாமல் ஆக்கும். மேலும், பாலினப் பாவங்கள் பல சமயங்களில் பூமிக்குரிய பின் விளைவுகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக, ஏய்ட்ஸ் போன்ற வியாதிகள் கள்ள பாலின செய்கையால் ஏற்பட வாய்ப்பு உண்டு, அதின் முடிவு வியாதி மற்றும் கடைசியாக மரணம். இப்படிப்பட்டதான பின் விளைவுகள் குடும்பத்தை அழிக்கக் கூடும். மணமாகாத ஆண் பெண் பாலுணர்வு - திருமணமாகாத இருவருக்கும் உள்ள பாலின செயல்கள் - இதுவும் "விபசாரம்" என்ற தலைப்பின் கீழ் வருவதாகும். திருமணமாகாதவர்களுக்கு, இப்படிப்பட்ட பாவச் செயல்கள் தீய விளைவுகளுக்கு வழிநடத்தி கிரந்தி நோய் ஏற்படலாம், திட்டமிடாத பெற்றோர்த்துவம் அல்லது ஞானமற்ற திருமணங்கள் குடும்பத்தை தண்டனைக்குள்ளாகி குடும்பம் தொடங்குவதற்கு முன்பே பெரும்பாலும் தோல்வியை சந்திக்கக்கூடும்.

*அசுத்தம் மற்றும் வேசித்தனம்.* மற்ற பலவகை பாலினப் பாவங்கள் "அசுத்தம்" மற்றும் "வேசித்தனம்" என்ற வார்த்தையில் அறிவுறுத்தப்படுகிறது ("அசுத்தம்" மற்றும் காமவெறி; KJV). இந்த மாம்சத்தின் கிரியைகள் இப்படிப்பட்ட விஷயங்களை உள்ளடக்கியது ஆகும் (அ) எதிர் பாலினரை தூண்டக் கூடிய பழக்கத்தில் ஈடுபடுவர் அல்லது மற்றவர்கள் தூண்டப்படுவதற்கு காரணமாகுதல், (ஆ) பாலின தொழிலை அனுமதி பெற்று செய்வதற்கு பிரசித்தப்படுத்தக்கூடிய செயல்களில் பங்கு கொள்வது மற்றும் (இ) இன்று சமுதாயத்தில் எளிதில் கிடைக்கக் கூடிய காம உணர்ச்சியை தூண்டக்கூடிய படங்களை பார்ப்பதன் முடிவாக இருதயத்தில் இச்சை கொள்ளுதல். இப்படிப்பட்ட பழக்கங்கள் தேவனுக்கு பிரியமற்றவைகள் மட்டும் அல்ல மேலும் தொடர்ந்து பாவம் செய்வதற்கு வழிவகுக்கிறது அல்லது பாலினத்தை பற்றிய ஒருவருடைய

எண்ணங்களை திரிக்கக் கூடியது ஆகும் - இவைகள் இரண்டும் குடும்பத்திற்கு கேடு உண்டாக்கக் கூடியது ஆகும்.

## மத சம்பந்தமானவைகளில் முரண்பாடு

இரண்டாம் தொகுப்புகளின் பாவங்கள் வரிசையில் மதசம்பந்தமான பாவங்கள் உள்ளடங்கியது - "விக்கிரகாராதனை" மற்றும் "பில்லி சூனியம்." கலாத்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட மதசம்பந்தமான பிரச்சனைகளை சந்தித்தனர். நம்முடைய சமுதாயத்தில் பலதரப்பட்ட பிரச்சனைகளை சந்திக்கிறோம், ஆனால் *மதசம்பந்தமான முரண்பாடுகள் குடும்பத்தை அழிக்கும்* என்று அறிந்து அதின் கருத்தை செயல்படுத்தலாம்.

உண்மையில், கலாத்தியாவில் உள்ள பிரச்சனை குடும்பத்தில் மதசம்பந்தமான முரண்பாடுகள் மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்களை திருமணம் செய்ததினால் சில சமயங்களில் பிரச்சனை காணப்பட்டது. மாறாக, பவுல் இங்கு அவர்களை எச்சரிக்கும் பிரச்சனை என்னவாய் இருக்கிறது என்றால் அவர்கள் போகிறதான பாதை, அல்லது, பின்வாங்கி செல்லுதல் விக்கிரகாராதனை மற்றும் பில்லிசூன்யத்தின் பழக்கத்திற்கு உட்படுவதை குறிக்கின்றார். நிச்சயமாக, நாம் எந்தவிதமான பொய் மதங்களை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக எச்சரிக்கப்பட வேண்டியது அவசியமாகும் - விக்கிரகாராதனை என்பது இன்றைய நாட்களில் ஜடப் பொருளை ஆராதிப்பதாகும்.

நாம் இந்த எச்சரிக்கையை குடும்பத்தில் செயல்படுத்தி குடும்பத்தில் ஏற்படும் மதசம்பந்தமான முரண்பாடுகளையும் தீய விளைவுகளையும் குறிப்பிட்டுக் காண்பிப்பது ஒருவேளை சிறந்த வழியாக இருக்கலாம். எந்த விதமான மதசம்பந்தமான முரண்பாடுகள் குடும்பத்தை அழிக்கக் கூடும்?

ஒரு கிறிஸ்தவன் ஒரு கிறிஸ்தவரல்லாதவரை திருமணம் செய்யும் போது, முரண்பாடுகளும் பிரச்சனைகளும் நிச்சயமாக எழும்பும். அந்த தம்பதியினர் எங்கு ஆராதிப்பார்கள்? தங்கள் மீதியான வாழ்நாட்கள் முழுவதும் சபைகூடும் நேரத்தில் எல்லா வாரமும் இந்த இருவரும் பிரிந்து இருப்பது ஒரு சந்தோஷமான திருமணமாக இருக்காது. அந்த கிறிஸ்தவர் கர்த்தருடைய சபைக்கு வராதே போனால், அந்த திருமணம் முக்கியமான ஈடுபாட்டை இழந்து போகிறது, ஆண்டவர் ஒரு ஊழியக்காரனை இழந்து போகிறார், மற்றும் அந்த கிறிஸ்தவர் அவர் அல்லது அவள் தன் ஜீவனை இழந்து போகிறார்! பிள்ளைகளிடத்திலும் இந்த பிரச்சனையின் பாதிப்பு காணப்படும்: யாருடைய விசுவாசத்தை பிள்ளைகள் பின்பற்ற வேண்டும்? எங்கு அவர்கள் ஆராதிப்பார்கள்? தர்க்கரீதியாக ஆயத்தம் செய்து யார் யாருடன் செல்வது என்று தீர்மானித்திருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கையில் முக்கியமான பங்கான இந்த விஷயத்தில் கணவன் மற்றும் மனைவி ஒன்றாக இல்லை என்பது உண்மையே. திருமண தம்பதிகள் மதம் சார்ந்த விஷயங்களில் வேறுபட்டு இருக்கும் போது, முரண்பாடுகள் எழும்பும்.

இதற்கு தீர்வு என்ன? விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவரை திருமணம் செய்து கொள்வது தான். நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளாத வேறொருவரை ஏற்கனவே திருமணம் செய்திருந்தால், நீங்கள் இருவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்க தேவனுடைய வார்த்தையைப் படிக்க வேண்டும்.

## கோபம், விரோதம் மற்றும் சுயநலம்

மூன்றாவது தொகுப்பின் பாவங்களை உள்ளடக்கியது "பகைகள்," "விரோதங்கள்," "வைராக்கியங்கள்," "திடீரென வெடிக்கும் கோபங்கள்," "சண்டைகள்," "பிரிவினைகள்," "மார்க்க பேதங்கள்," "பொறாமைகள்," "கொலைகள்" முதலியன. *கோபம் மற்றும் விரோதம் குடும்பத்தை அழிக்கும்* என்று கூறுவதின் மூலம் இந்த எச்சரிக்கைகளை நமது குடும்பத்திற்கு நடைமுறைப்படுத்த முடியும்.

இந்த வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்துகிறது? முதலாவது வார்த்தையான "பகைகள்" குறிப்பது இரு பிரிவுகளுக்கு இடையே உள்ள, தேசத்திற்கு இடையே உள்ள, மற்றும் தனிநபர்களிடம் இடையே உள்ள பகைகள் போன்றவைகள். "விரோதம்" என்று மொழியாக்கப்பட்டது ("ஒவ்வாமை"; NIV) "உலகத்திலும் மற்றும் சபையிலும். ஏற்படும் விரோதத்தின் இயற்கையான வெளிப்பாடு."[1] "வைராக்கியம்" அல்லது "ஆர்வம்" மற்றும் "கோபம்" ஆகிய இரண்டும் புதிய ஏற்பாட்டில் நல்ல அர்த்தத்தில் உபயோகப்படுத்தலாம், ஆனால் அவைகள் கெட்ட அர்த்தத்திலே இங்கே உபயோகப்படுத்தப்படுகிறது. "ஆர்வம் [மற்றும்] கோபம் சுயநல நோக்கத்தோடு துவங்கி தற்பெருமையை காயப்படுத்தும் போது, அவைகள் தீமையுடன் மற்றவர்களை காயப்படுத்தும்."[2] "விரோதம்" என்ற வார்த்தை வேறொரு இடத்தில் "சுயநல நோக்கம்" அல்லது "சுயநலம்" என்று மொழியாக்கப்பட்டுள்ளது மற்றும் அடிப்படையில் "ஒரு சுயநலமான மற்றும் செயலை அணுகும் சுயத்தை மேன்மைப்படுத்துதலாக இருக்கிறது." மக்கள் வேறுபட்டு நிற்கவும் மற்றும் "விரோதம் பெருகவும் கூடிய விஷயங்களுடன் தொடர்புடையது."[3]

உண்மையில், பவுல் குடும்பத்தில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் இருக்கிறது என்று அடிப்படையில் பேசவில்லை. அவருடைய மனதில் ஒரு சூழ்நிலை இருந்தால், கோபங்கள், சண்டைகள் மற்றும் பிரிவினைகள் அடிக்கடி காணப்படும் சபையைப் பற்றியதாக இருந்தது.

அப்படிப்பட்ட சூழ்நிலை குடும்பத்தில் இருக்கும் போது - அந்த குடும்பத்தில் இப்படிப்பட்ட பண்புகள் தெளிவாய் காணப்படும் போது - அந்த குடும்பம் ஒன்று ஏற்கனவே அழிந்திருக்கும் அல்லது வெறும் ஒரு கூடு போல இருக்கிறது, அல்லது எந்த நேரத்திலும் உடையக் கூடியதாக இருக்கிறது. அந்த குடும்பத்தில் எத்தனை நபர்கள் இருந்தாலும் சரி, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் அல்லது கணவன் மற்றும் மனைவி, மாத்திரமே இருந்தாலும் சரி இந்த வாசகம் உண்மையானது. பல குடும்பங்கள், உண்மையில், இப்படிப்பட்ட பாவங்களால் உடைந்து போயிருக்கின்றன. எவர் ஒருவரும் விபசாரம் செய்யாத குடும்பத்திலும், இருவரும் கிறிஸ்தவர்களாய் இருக்கும் குடும்பத்திலும், மற்றும் பல ஆண்டுகள் ஒன்றாக இருந்த குடும்பங்கள்கூட பகைகள், விரோதம், பொறாமை மற்றும் கோபத்தினால் அழிந்திருக்கிறது.

குடும்பத்தில் இப்படிப்பட்ட பாவங்கள் காணப்படும் போது இந்த பிரச்சனைகளுக்குரிய சாவி உண்டா? ஆம்! பவுல் கலாத்தியர் 5:20ல் வரிசைப்படுத்திய பாவத்திற்கு இரண்டு அடிப்படை தவறுதல்கள் வழிநடத்தின; அது சயநலம் மற்றும் பிரச்சனைகள் எழும்பும் போது அதை தீர்க்கக் கூடிய திறன் இல்லாதது.

**சுயநலம்**

*விரோதத்தைப் பற்றி நினைக்கும் போது, வீட்டிலோ அல்லது வெளியிலோ, ஒரு நபர், அவன் அல்லது அவள் தன் விருப்பப்படியேதான் நடக்க வேண்டும் என்றோ, தான் சொல்வதுதான் நடக்க வேண்டும் என்றோ அல்லது வியாபாரத்தில் உன்னதமான பங்கைப் பெற்றுக்கொள்வதில் தீர்மானமாயில்லாமல் இருப்பதையோ நினைத்துப் பார்க்க முடியாது. தன்முனைப்பு மற்றும் சுய மதிப்பைப்பற்றி கடந்த காலத்தில் அதிகமாக சொல்லப்பட்டிருப்பது உண்டு. நமக்கு சுய மதிப்பு அவசியமாயிருக்கிறது. இருப்பினும், சுயமதிப்பு இல்லாமலிருத்தலைவிட மிகவும் பெரிய பிரச்சனையானது சுயநலமாயிருக்கிறது. ஒருவேளை குடும்பத்தில் விரோதம் மற்றும் கோபம் போன்ற பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு கிறிஸ்தவர்கள் சுய நலமாய் இருக்கக் கூடாது, அவர்களுடைய வழிகளையே முக்கியப்படுத்தக் கூடாது (ஒப்பிடவும் 1 கொரிந்தியர் 13:5), மற்றவர்களை தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ண வேண்டும் (பிலிப்பியர் 2:3, 4), மற்றும் தன்னில் அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூரவேண்டும் என்பதே (மத்தேயு 22:39; பார்க்கவும் 7:12).*

**பிரச்சனைகளை சரியான முறையில் கையாள திறன் இல்லாமை**

*எந்த திருமணத்திலும் மற்றும் எந்த குடும்பத்திலும் பிரச்சனைகள் எழும்பும். மேலும், அடிக்கடி கருத்து வேறுபாடுகள் எழும்பும் போது அதை நாம் வெளிக்கொண்டுவராமல், மாறாக மூடிமறைப்பதுண்டு. பின்பு அது புண்ணாகும் வரை வைத்து முடிவாக விரோதம் மற்றும் பிரிவினைகளை உண்டாக்கும். நாம் ஒருவருக்கொருவர் செய்யும் பாவங்களில் அக்கறை எடுத்துக் கொள்வதற்கு பதிலாக நாம் பாவத்தை நமக்கு நாமே மறுதலித்து மற்றும் குடும்பத்திலிருக்கும் மற்றவர்களையும் மறுதலிக்கிறோம்.*

*யாரோ ஒருவர் இவ்வாறு சொன்னார், "நாம் நியாயமான முறையில் சண்டை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்." அந்த வாசகம் உண்மைதான். உண்மையில் இன்னும் சொல்லப்போனால் தனிப்பட்ட உறவுகளில் பிரச்சனைகளை வேதாகம வழியில், கிறிஸ்தவ வழியில் கையாளுவதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் மன்னிப்பு கேட்பதற்கு விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் மற்றும் மன்னிப்பு அளிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.*

*தாழ்ப்புணர்ச்சியை தேக்கிவைத்தல் என்பது - நாம் மன்னிக்க மறுப்பது என்பது மற்றோரு வழியில் சொல்வதாகும் - விரோதத்திற்கு காரணமும் மற்றும் குடும்பத்தை அழிக்கக் கூடியதும் ஆகும். பவுலின் ஆலோசனை குடும்பத்திலுள்ளவர்களுக்கு சிறந்ததாகும்: "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" (எபேசியர் 4:26, 27).*

## மதுபான வெறி

*நான்காவது வகை பாவம் நம்முடைய வேதபாட பகுதியில் கடைசி இரண்டு மாம்சத்தின் கிரியைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: அவைகள் ''வெறிகள்'' மற்றும் ''களியாட்டுகள்.'' இந்த பண்புகளை*

குடும்பத்திற்கு செயல்படுத்தி "மதுபானவெறி" *(அல்லது போதை மருந்துக்கு அடிமை) குடும்பத்தை அழிக்கும் என சொல்லலாம்.*

நமக்கு மதுபான வெறி என்றால் என்ன என்பது தெரியும். "களியாட்டம்" என்பது குடிபோதையில் மிகுந்த சத்தத்தோடும் பேராசையோடும் மற்றும் மதுபானத்துடன் கேளிக்கையாட்டம் போடுவதோடு தொடர்புடையது.

"களியாட்டம்" என்பதைப்பற்றி, குடித்து ஆட்டம் போடுதல் குடும்பத்தை அழிக்கும் என்று நாம் சொல்லலாம். துணைகளில் ஒருவர் குடித்து "பொழுதை சந்தோஷமாகக் கழிக்க" விரும்புவதால் உண்மையில் சில குடும்பங்கள் அழிந்து போயிருக்கின்றன. எல்லாவிதமான பொழுது போக்குகளும் குடும்பத்திற்கு ஆபத்தாய் இருப்பதில்லை, ஆனால் சில அவற்றை அழிக்கும். எந்த வகையான கொண்டாட்டங்களும் *அளவுக்கு மீறிப் போனால்*, அது குடும்பத்தை அழிக்கும் என்று சொல்ல முடியும்.

*"மதுபானவெறி"* எப்பொழுதும் குடும்பத்தை அழிக்கக்கூடிய பிரச்சனை ஆகும். தீமையை விளைவிக்கக்கூடிய போதை பானங்களை குடிப்பதினால் ஏற்படும் விளைவுகள் போதுமான அளவிற்கு அறியப்பட வில்லை. இணையதளத்தில் மதுபானத்தைப் பற்றி கொடுக்கப்படுகிற தகவல்கள் வேடிக்கைகளாகவே சித்தரிக்கப்படுகின்றன. ஒரு ஹாசிய நடிகர் சொன்னார், "நான் குடிப்பதினால் ஏற்படும் தீமைகளை வாசித்தேன், அதனால் நான் வாசிப்பதை நிறுத்திவிட்டேன்." *ஆனால் மதுபானம் என்பது வேடிக்கை அல்ல!* மதுபானம் என்பது மகிழ்ச்சியானதும் அல்ல!

மதுபானம் குடிக்கும் தந்தையின் பிள்ளை மதுபானம் ஒரு வேடிக்கையானது என்று நினைக்குமா? அவன் தந்தை குடிப்பதினால் தன் வேலைகளை சரிவர செய்ய இயலாது, காலையில் நேரத்துடன் எழவும் இயலாது. அதனால் வேலைக்கு தாமதமாக செல்வான் அல்லது குடித்து விட்டு வேலைக்கு சென்றதால் வேலையை இழந்து போவான். அதன் முடிவாக, அந்த பிள்ளைகளை ஏழ்மையில் வாழ்கிறது. மேலும், அவன் தந்தை குடிக்கும் போது, அவர் கொடூரமாக மாறி, தன் மனைவியை திட்டி மற்றும் பிள்ளகளை அடிப்பார். இப்படிப்பட்ட பிள்ளை மதுபானம் ஒரு மகிழ்ச்சியானது என்று நம்புமா?

ஒரு தாய் சிறு மகனை மதுபானம் குடித்த ஒட்டுனர் அந்த மகன் மீது ஏற்றி கொன்றதால் அந்த தாய் மதுபானம் வேடிக்கையானது என்று நினைக்க முடியுமா? திருமணமாகாத ஒரு பெண் தான் மதுபானம் குடித்ததினால் கர்ப்பம் ஆனால், அந்த இளம் பெண்ணுக்கு அது இன்னும் கேளிக்கையாக இருக்குமா? அதிகமாகக் குடித்துவிட்டு அவளுடன் சில பொழுதை சந்தோஷமாகக் கழித்த ஒரு ஆண் கும்பலால் கற்பழிக்கப்பட்டவளின் நிலை என்ன?

குடும்பத்தில், மனைவியை திட்டுவதிலும் மற்றும் பிள்ளைகளை திட்டுவதிலும் குடிப்பழக்கம் பெரும்பங்கு வகிக்கிறது. அவைகள் பொய் பேசுவதற்கும், ஏமாற்றுவதற்கும் மற்றும் பாலின பாவங்களுக்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுவதில் தோல்வி மற்றும் ஏழ்மைக்கும் மற்றும் விவாகரத்திற்கும் வழிவகுக்கும்.

குடிப்பழக்கம் என்பது வேடிக்கையல்ல; அது ஒரு பாவம். பழைய ஏற்பாடு மதுபானத்திற்கு விரோதமாக எச்சரிக்கிறது (நீதிமொழிகள் 23:29-35), குடிப்பழக்கம் பாவம் என்று புதிய ஏற்பாடு தெளிவாக கூறுகிறது (ரோமர் 13:13, 14; 1 கொரிந்தியர் 5:11-13; 6:9, 10; எபேசியர் 5:18). வேதாகமம்

குடிப்பழக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை உதாரணமாக பதிவு செய்திருக்கிறது. நோவாவின் குடிப்பழக்கம் அவன் குமாரன் சபிக்கப்படுவதற்கு வழிநடத்திற்று; லோத்துவின் குடிப்பழக்கம் அவன் தன் மகள்களுடன் தகாத உறவு கொள்வதில் முடிந்தது (ஆதியாகமம் 9:20-27; 19:29-38).

உண்மையில், குடிவெறி குடும்பத்தை அழிப்பதாக இருக்கிறது. இந்த பிரச்சனைக்கு கிறிஸ்தவனின் பதில் செயல் என்னவாக இருக்க வேண்டும்? முதலாவது, கிறிஸ்தவர்கள் போதைக்கு விலகியிருக்க வேண்டும். சிறிதளவு மதுபானம் கூட அபாயகரமானதாகும். மேலும், கிறிஸ்தவர்கள் குடிப்பழக்கத்தில் ஆழ்ந்து இருப்பவர்களை திருமணம் செய்து கொள்ளக் கூடாது மற்றும் தன் பிள்ளைகளுக்கு குடியினால் ஏற்படும் தீமைகளை போதிக்க வேண்டும். குடிப்பழக்கம் குடும்பத்தை அழித்துவிடும்![4]

## முடிவுரை

உங்களுக்கு வெற்றிகரமான குடும்பம் வேண்டுமா? ஆவியின் கனியை உங்கள் வாழ்வில் சேர்த்து மாம்சத்தின் கிரியைகளை களைந்து போடுங்கள்! குறிப்பாக, குடும்பத்தை அழிக்கக் கூடியவைகளை நினைவில் வையுங்கள்.

- பாலின பாவங்கள் உங்கள் குடும்பத்தை அழிக்கும்.
- மத சம்பந்தமான முரண்பாடுகள் உங்கள் குடும்பத்தை அழிக்கும்.
- கோபம், விரோதம், மற்றும் சுயநலம் உங்கள் குடும்பத்தை அழிக்கும்.
- குடிப்பழக்கம் மற்றும் மற்ற அடிமைப்படுத்தக் கூடியவைகள் உங்கள் குடும்பத்தை அழிக்கும்.

சந்தோஷமாக, ஆரோக்கியமாக, வெற்றிகரமானதாக நாம் வாழ்க்கை நடத்தக் கூடும்படி நம்முடைய குடும்பத்தை சிறந்ததாக்குவதற்கு உறுதி எடுத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட வாழ்வினால் தேவன் பிரியப்படுவார் மற்றும் அவர் நம்முடைய குடும்பங்களில் மகிமைப்படுவார்.

---

குறிப்புகள்

[1]இந்த பகுதியில் உள்ள வரையறைகள் James Montgomery Boice ன் "கலாத்தியரி"லிருந்து எடுக்கப்பட்டவை, *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 496. [2]Ibid. [3]Ibid. [4]ஏற்கனவே அடிமையானவர்களின் நிலைமை என்ன? அவர்கள் அந்த பிரச்சனையிலிருந்து மீண்டு வர உதவிசெய்ய வேண்டும். குடிப்பழக்கம் ஒரு பாவம் - அது பாவம் மட்டும் அல்ல, மற்றும் அது மற்ற பாவங்களைவிட கொடிதான பாவம் (அதின் விளைவுகள் ஒழிய). நாம் சந்திக்கிறதான மதுபான பிரியர்களுக்கு நம்மால் முடிந்த சிறந்த காரியங்களை செய்ய வேண்டும்.